


25. 03. 2026

தலைப்புச் செய்திகள்

- மேற்காசியா நெருக்கடி நிலைமை குறித்து விவாதிக்க மத்திய அரசு இன்றுமாலை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.
- நாட்டின் சூரிய சக்தி உற்பத்தி திறன் தற்போது 172 ஜிகா வாட்டாக உயர்ந்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் தொடர்பான சிறப்பு கையேட்டை மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் சென்னையில் இன்று வெளியிட்டார்.
- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக-வின் முதலாவது வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.
- தி.மு.க. தனது தோழமை கட்சிகளுடன் இணைந்து அதன் சின்னத்தில் 175 இடங்களில் போட்டியிடுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

அனைத்து கட்சிக்கூட்டம்

மேற்காசியாவின் நெருக்கடி நிலைமை குறித்து விவாதிக்க இன்றுமாலை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, எதிர்கட்சிகளுடன் மேற்காசியத்தின் தற்போது நிலவரம் குறித்து விவாதிப்பதற்கான இந்த கூட்டம் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

நெருக்கடியான இத்தருணத்தில் எதிர்கட்சிகள் ஆக்கப்பூர்வமாக பங்காற்ற வேண்டும் என்று கூறியுள்ள அவர், ஆனால் எதிர்கட்சிகள் இப்பிரச்சனையை அரசியலாக்குவதாக குறை கூறினார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி நேற்று மாநிலங்களவையிலும், நேற்றுமுன்தினம் மக்களவையிலும் மேற்காசிய நிலைமை குறித்து உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

நாட்டில் சூரிய சக்தி உற்பத்தி திறன் தற்போது 172 ஜிகா வாட்டாக உயர்ந்துள்ளது என்று மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்காலத்தில் ஒட்டுமொத்த சூரிய மின் உற்பத்தி திறன் வெறும் 2.8 சதவிகிதமாக இருந்ததாகவும், ஆனால் தற்போது அது 144 சதவிகிதமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

பிரதமரின் சூரிய இல்லம் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் தினசரி 10 ஆயிரம் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஜீதேந்திர சிங்

உள்நாட்டில் அரிய வகை காந்த உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில் நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று இதனை தெரிவித்த அவர், உள்நாட்டு உற்பத்தி பற்றாக்குறையால் வெளிநாடுகளிலிருந்து 80 சதவிகித அளவிற்கு அரிய வகை காந்த பொருட்களை நாம் இறக்குமதி செய்வதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இப்பிரிவில் தற்சார்பு நிலையை எட்டும் வகையில் கடந்த 11 அண்டுகளாக பல்வேறு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தற்போது உற்பத்தி படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

நம்நாட்டின் அரிய புவி காந்த தேவை தற்போது 4 ஆயிரம் அலகுகள் என்று கூறிய அவர், 5 ஆயிரம் அலகுகள் உற்பத்தி திறனை நம்நாடு எட்டும் போது தேசத்தின் தேவை 8 ஆயிரம் அலகுகளாக அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

ரயில் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒருலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், அரசின் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளால் ரயில் விபத்துகள் 90 சதவிகிதம் அளவிற்கு குறைந்துள்ளது என்றார்.

நாடுமுழுவதும் கோவிட்டுக்கு பிந்தைய காலத்தில் ஆயிரத்து 24 புதிய ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே இருந்த ரயில்களில் 4 ஆயிரத்து 651 புதிய பெட்டிகள் இணைக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நேர்மையான ரயில் பயணிகளின் டிக்கெட் பதிவு முறையை உறுதி செய்யும் வகையில் 3 கோடிக்கும் அதிகமான போலி I.R.C.T.C. கணக்குகள் செயலிழக்கம் செய்யப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

அர்ச்சனா பட்நாயக்

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் தொடர்பாக பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் சிறப்பு கையேட்டை மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் சென்னையில் இன்று வெளியிட்டார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி ஊடகவியலாளர்கள் பங்கேற்றுள்ள பயிலரங்கு நிகழ்வில் இன்று உரையாற்றியஅவர், தமிழக நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மருத்துவ காரணங்களுக்காக பொதுமக்கள் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணிசெய்திகள் நம்பகத்தன்மையுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழக தேர்தல்

தமிழகத்தில் அடுத்த மாதம் 23-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்க இன்னும் 4 நாட்களே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் விரைவில் இறுதி செய்யப்படவுள்ளன.

இதனிடையெ அஇஅதிமுக போட்டியிடும் 23 பேர் கொண்ட முதலாவது வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, எடப்பாடியில் போட்டியிடுகிறார்.

திரு. கே.பி. முனுசாமி, வேப்பனஹள்ளி,

திரு. திண்டுக்கல் சீனிவாசன், திண்டுக்கல்

டாக்டர் சி. விஜயபாஸ்கர், விராலிமலை,

திரு. எஸ்பி. வேலுமணி, தொண்டாமுத்தூர்,

திரு. ஜெயக்குமார், ராயபுரம்,

திரு. செல்லூர் கே. ராஜு, மதுரை மேற்கு

திரு. காமராஜ், நன்னிலம்,

திரு. ஓ.எஸ்.மணியன், வேதாரண்யம்

திரு. ஆர்.பி. உதயகுமார், திருமங்கலம்,

திரு. தங்கமணி, குமாரப்பாளையம்,

திரு. கடம்பூர் ராஜு, கோவில்பட்டி தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தமது பிரச்சாரத்தை இன்று தொடங்குகிறார்.

அஇஅதிமுக கூட்டணியில், பி.ஜே.பி. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை கட்சியின் மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் புதுதில்லியில் கட்சித் தலைமையுடன் ஆலோசித்து இறுதி செய்யவுள்ளார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக மற்றும் அதன் சின்னத்தில் தோழமை கட்சிகள் 175 இடங்களில் போட்டியிடவுள்ளதாக கட்சித்தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று அறிவித்தார்.

தி.மு.க. தொகுதி பட்டியல் இன்று இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

தமிழ்நாட்டில் 100 சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்வது உள்ளிட்ட தேர்தல் நடைமுறைகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மங்கள வாத்தியங்கள் முழங்க மாணவ மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

கிழக்கு ராஜவீதி, மாமல்லபுரம் பேருந்து நிலையம், அர்ஜுனன்தபசு, வெண்ணெய் உருண்டை பாறை வழியாக நகராட்சி அலுவலகத்தை இப்பேரணி சென்றடைந்தது.

வழி நெடுகிலும் பொதுமக்களுக்கு வாக்குப் பதிவை வலியுறுத்தும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

நெல்லையில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சுகுமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் குறித்து அவர் எடுத்துரைத்ததோடு, வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்முறை விளக்கமும் அளித்தார்.

இதனிடையே மாணவ மாணவிகள் ஸ்கேட்டிங் சென்றவாறே 100 சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

தேனி மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப் பதிவை வலியுறுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட இலட்சினையை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ரஞ்சித் சிங் இன்று வெளியிட்டார்.

தேனியின் அடையாளமான புவிசார் குறியீடு பெற்ற கம்பம் பன்னீர் திராட்சையை மையமாக கொண்ட இலட்சினையில் வாக்காளர் வாக்கு செலுத்தியதற்கான அடையாளம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட பாலக்கரை பகுதியில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பள்ளி மாணாக்கரின் ஸ்கேட்டிங் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. மிருணாளினி கொடியசைத்து துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் திருச்சி

திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் புலிவலம் பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை மைய முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. வே. சரவணன் இன்று ஆய்வு செய்தார்.

திருச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ரவிச்சந்திரன் கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

Unborn Child Day

கருவில் உள்ள குழந்தைகளுக்கான சர்வதேச தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது

கர்ப்பிணி பெண்கள் முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு ஊட்டச்சத்து உணவை உட்கொள்வது அவசியம் என்று திருச்சியை சேர்ந்த பச்சிளம் குழந்தையியல் மருத்துவர் எழில்வாணன் எடுத்துரைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

108 வைணவ திவ்ய தேச தலங்களில் ஒன்றான நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் 114 ஆண்டுகளுக்கு பிறகு வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

இத்தாலியில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல், இத்தாலியின் Federico Bondioli-யை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

மெக்சிக்கோ சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரித்விக் போலிப்பள்ளி, அர்ஜுன் கதே இணை – ஆஸ்திரேலியாவின் Patrick Harper, அமெரிக்காவின் தியோடர் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖